OS.No. 53/2022

Date : 05.03.2026

Witness Name & Rank – தவமணி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. எனக்கு பிரதிவாதியை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும். அதே போல் பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்று தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் விவசாயம் செய்து வருகிறார். நான் சொல்வது போல் பிரதிவாதி விவசாயம் செய்து வரவில்லை நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்ப விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் வீட்டு முகவரி தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு பொதுவாக நாளிதழ் படிக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். அதே போல் 2 லட்சத்திற்கு மேல் கடன் கொடுக்க வேண்டும் என்றால் வங்கி கணக்கு மூலம் கொடுக்கப்பட வேண்டும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கடன் கொடுத்தாக சொல்லியுள்ள நிலையில் அந்த தேதி தெரியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை எனவே தான் என்னால் தேதி குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல.
2. பிரதிவாதிக்கு கடன் தொகையை ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேனா என்றால் இல்லை, 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். பிரதிவாதி எழுதிக் கொடுத்தாக சொல்லப்படும் கடனுறுதிச் சீட்டு யார் சாட்சி கையொப்பம் செய்தது என்றால் சதீஷ் மற்றும் சுப்பிரமணியம் ஆகும். இந்த வழக்கில் மேற்சொன்ன சதீஷ் மற்றும் சுப்பிரமணியத்தை சாட்சியாக விசாரிக்க எண்ணம் உண்டா என்றால் விசாரிப்பேன். கார்த்திகேயன் மற்றும் ரகுபதி ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் இல்லை, நண்பர்களா என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்கு எங்கு வைத்து யார் முன்னிலையில் கடன் கொடுத்தேன் என்று எனது பிராது மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் பெற்றதாக சொல்லப்படும் சமயத்தில் யாரை அழைத்து வந்தார் என்றால் அவர் மட்டும் தான் வந்தார். நான் சொன்ன

தேதியில் சமயத்தில் பிரதிவாதி இந்த ஊரில் இல்லை என்றால் சரியல்ல.

3. பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையை தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். மேற்படி எதிர்வழக்குரைக்கு நான் மறு வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் இதுவரை எந்த வரவு செலவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கடனுறுதிச் சீட்டில் பிரதிவாதி இரண்டு கையொப்பம் மற்றும் இரண்டு ரேகை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு கடனுறுதிச் சீட்டு கார்த்திகேயனிடம் இருந்து பெற்று என்னால் பூர்த்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டதால் தான் அந்த விவரம் எனக்கு குறிப்பிட்டு தெரியவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கார்த்திகேயனுக்கும் பிரதிவாதிக்கும் சொத்து தொடர்பாக வரவு செலவு இருந்தது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. மேற்படி கார்த்திகேயனுக்கும் பிரதிவாதிக்கும் சொத்தில் கிரைய உடன்படிக்கை ஏற்பட்டு அதற்கு முன் பணமாக பிரதிவாதிக்கு ரூ. 9,45,000 கொடுக்கப்பட்டு பிறகு கிரையம் எழுதிக்கொள்ள மனம் இல்லாததால் பிரதிவாதியிடம் இருந்து கொடுத்த முன் பணத்தை பெற்ற போது மீதி முன் பணம் ரூ. 1 லட்சத்திற்காக பாதுகாப்பிற்கு தரப்பட்ட பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிச் சீட்டை என் மூலம் வீண் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. கார்த்திகேயன் திருமலைநாயக்கன்பாளையத்தை சேர்ந்தவர் என்றால் கார்த்திகேயன் யார் என்றே தெரியாது. மேற்படி கார்த்திகேயன் இறந்துவிட்டார் என்றால் தெரியாது. இந்த வழக்கு கடனுறுதிச் சீட்டு கார்த்திகேயனுக்கு கொடுக்கப்பட்டது எனவே எனக்கு கொடுக்க சட்டப்படியான கடன் எதுவும் இல்லை உரிய வழக்குமூலம் இல்லாத வழக்கு செலவுத்தொைகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.